NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 22 May 2023

# மேன்மேலும் சாதனை புரியும் வேட்கை



கருணாநிதி துர்கா





மதுமிதா, ஷஃப்ரீன். **படங்கள்: சாவ்பாவ், பெரித்தா ஹரியான்**

மாணவர்களின் உழைப்பை அங்கீகரிக்கும் விதமாக அண்மையில் யேல்-என்யுஎஸ் கல்லூரி மாணவர்களின் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. கடந்த 12ஆம் தேதியன்று சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் கலாசார மையத்தில் நடந்த பட்டமளிப்பு விழாவில் 14 பட்டப்படிப்புகளைப் பிரதிநிதித்து 250 மாணவர்கள் பட்டம் பெற்றனர். இந்த 250 மாணவர்களுள் 189 மாணவர்கள் இளங்கலை ஹானர்ஸ் பட்டமும் 61 மாணவர்கள் இளநிலை ஹானர்ஸ் பட்டமும் பெற்றனர்.

யேல்-என்யுஎஸ், டியுக்-என்யுஎஸ் ஆகியவற்றின் தாராளமயக் கலைகள் (liberal arts), மருத்துவக் கல்விப் பாதையில் சென்று மானுடவியல் துறையில் இளங்கலை ஹானர்ஸ் பட்டக்கல்வியை முடித்தவர் ஐயப்பன் மதுமிதா, 23.

“மருத்துவத்திற்கும் மானுடவியலுக்கும் என்ன ஒற்றுமை உள்ளது எனப் பலர் யோசிப்பதுண்டு. மானுடவியலின் மூலம் நோய்கள், மருத்துவமுறைகளின் சமூகக் கண்ணோட்டம், காரணிகள் ஆகியவற்றை அறிந்துகொள்வதால் மருத்துவத் துறைக்குக் கைகொடுக்கிறது,” என்று மதுமிதா கூறினார்.

மேலும், ‘யூகேர்’ என்ற மாணவர் தலைமையிலான இயக்கத்தை வழிநடத்தி அதையடுத்து ‘2022 குளோபல் இனோவேஷன் லேப்’பில் கலந்துகொண்டார் இவர். இதன் மூலம் மனநலம் சார்ந்த சவால்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு அவற்றுக்கான தீர்வுகளைக் கண்டறியவும் விரும்புகிறார் மதுமிதா.

“மானுடவியல் பயின்ற பின் இந்த உலகம் குறித்த எனது பார்வை மாறியுள்ளது. ஒவ்வொருவரும் கொண்டுள்ள வெவ்வேறு அடையாளங்களைப் பற்றி தெரிந்துகொள்ள முடிந்தது,” என்று இவர் கூறினார். இதையடுத்து, டியுக்-என்யுஎஸின் மருத்துவக் கல்வித் திட்டத்தில் பயில விருக்கிறார் மதுமிதா.

இரட்டை இளங்கலைப் பட்டக் கல்வியாக சட்ட ஹானர்ஸ் பட்டக்கல்வியோடு பொருளியல் இளங்கலை ஹானர்ஸ் பட்டக் கல்வி மேற்கொண்டார் ஷஃப்ரீன் பாத்திமா பிந்தி அப்துல் நசீர், 24.

தொழில்நுட்பத்தில் ஆர்வம் கொண்ட இவர், ‘2019 யேல் உயிர் அறிவியல் சம்மர் கழகம்’ என்ற ஏழு வார திட்டத்தில் கலந்துகொண்டார். எச்ஐவி கிருமியைப் பற்றி ஆராய்ந்து தனது கண்டுபிடிப்புகளை போர்ச்சுகலின் உலக உயிர் அறிவியல் மாநாட்டில் பகிர்ந்தும் இருந்தார்.

“எனது சட்டப் படிப்பை ஒரு பொருளாதார கண்ணோட்டத்துடன் காண முடிந்தது. கல்லூரிப் பேராசிரியர்களின் ஆதரவோடு நான் இப்பட்டக்கல்வியின் மீது கொண்ட ஆர்வம் அதிகரித்தது. எனது வருங்கால பணியைத் தொடங்கும்போது இவ்விரு வகையான பகுப்பாய்வு சிந்தனைகளையும் பயன்படுத்த விரும்புகிறேன்,” என்று ஷஃப்ரீன் கூறினார்.

ஆல்ட்மேன் சோலனின் லண்டன் அலுவலகத்தில் தொழில்நுட்ப, ஊடக, தொலைத்தொடர்பு ஆய்வாளராக பணி புரியவிருக்கிறார் ஷஃப்ரீன்.

dhurga@sph.com.sg

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.